விலை: 30.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 036 வள்ளுவர் ஆண்டு 2053 தை 11 திங்கட்கிழமை (24.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






### பூஸ்டர் தடுப்பூசியைப் பெறாதவிடத்து

# யாழை மீண்டும் முடக்க நேரிடலாம்

### அரச அதிபர் எச்சரிக்கை




*(யாழ்ப்பாணம்)*

பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் கையிருப்பு இல்லை; இன்றிரவு முதல் மின் தடை

### மின்சார பொறியியலாளர் சங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

பல மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள எரிபொருள் கையிருப்பு குறை 15

### அரச நிறுவன ஊழியர்களுக்கும்

# ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு



(கொழும்பு)

அரசாங்கத்தின் வசமுள்ள நிறுவனங்களினது ஊழியர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் மாதாந்த மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இந்த மேலதிக கொடுப்பனவை வழங் 15

### சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர்

# கோவிட்டால் உயிரிழப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான வைத்தியர் அதுல கஹந்தலிய 15

### இந்தியாவின் உதவியை நாடும்

# தமிழர் தரப்பின் நகர்வுகள் சாதாரணமானவை அல்ல

### அரசுக்கு சுதந்திரக் கட்சி எச்சரிக்கை



*(கொழும்பு)*

தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து இந்தியாவை நாடியமை சாதாரண விடயமாக கருதமுடியாது எனவும் அவர்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வினை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனா

# 15 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில்மேலும்15 பேர்கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப் 15

# பேருந்து கட்டணங்களில் மீண்டும் மாற்றம்!

### இராஜாங்க அமைச்சர் அமுனுகம

(கொழும்பு)

எதிர்காலத்தில் பேருந்துப் பயணிகளுக்காக புதிய கட்டண முறைமை அறிமுகப்படுத்த வேண்டி ஏற்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். 15

# காலாவதியான தீர்மானங்களால் நாட்டை மீட்டெடுக்க முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை

(கொழும்பு)

காலாவதியான தீர்மானங்களினால் எதிர்நோக்கியுள்ள ஆபத்திலிருந்து நாட்டை மீட்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மக்களின் உரிமைகள் 15

# விடுதலைப் புலிகளின் கொள்கைகளை முன்னெடுக்கும் புலம்பெயர் தமிழர்கள்

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

குறிப்பிடத்தக்க அளவு புலம்பெயர் தமிழர்கள் விடுதலைப் புலிகளின் கொள்கைகளை தற்போதும் முன்னெடுத்துச் செல்வதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் வெளிவிவகார 15

# வவுனியாவில் பிள்ளையார் சிலையைக் காணவில்லை



(குருமன்காடு)

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை மாயமாகியுள்ளது.

வவுனியா, 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக்கலை, உணவுகள் தயாரித்தல் பயிற்சிகளின் 2021ம் ஆண்டு மாணவிகளின் பரீட்சைகளுக்காக இடைநிறுத்தப்பட் டிருந்த கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன. (C-3612)

பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்களும், புதிதாக கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக் கலை, உணவுகள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளில் சேர விரும்புவர்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். -இயக்குநர்

# 838 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 838 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு நேற்று இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 601,886 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## கடை வாடகைக்கு

அகலம் 20 அடி
நீளம் 37 அடி
மானிப்பாய் வீதி அருகாமையில்

076 841 9129
077 670 5689

(9812)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 20 பரப்புக் காணி 2 பரப்பாகவும்1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

நல்ல சூழல்.
வீடு அமைப்பதற்கு உகந்தது.

நிலப்பரப்பு
24 அடிப் பாதையுடன்
பலாலி வீதியிலிருந்து
500 மீற்றர் தூரம்

தொடர்பு
077 658 5999

(9813)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 10 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.
வீடமைப்பதற்கு நல்ல சூழல்.
(நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம்.

076 890 9259
077 015 0353

(9814)

## YARL DIRECT



- yarldirect
- yarl direct(Pvt) Ltd
- www.yarldirect.com
- No.327, Jaffna Point pedro Road, Malushanthy, Nelliady.

**YARL DIRECT PVT (LTD)**

உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை



**Call 077 779 9229 I 021 226 2582**

- சகல நாடுகளுக்கும் பொதிகள் மற்றும் ஆவணங்களை துரித கதியில் அனுப்பலாம்.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.
- 5-6 வேலை நாட்களுக்குள் பொதிகள் உரிய நாடுகளுக்கு சென்றடையும்.
- சிநேக பூர்வமான சேவை.
- நீங்கள் எமது அலுவலகம் வரமுடியாத சந்தர்ப்பத்தில் எமது அலுவலக ஊழியர்கள் உங்கள் வீட்டுக்கே வந்து பொதிகளை சேகரிப்பார்கள்.
- வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை மற்றும் விலைக்கழிவு.
- கோவிட்-19 இற்கான அனைத்து சுகாதார நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்படும்.

(C-3614) - நிபந்தனைக்கு உட்பட்டது -

# மரண அறிவித்தல்

## சுப்பையா கௌரிசாமி (தவில் வித்துவான்)



கோண்டாவில் மேற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவில் வித்துவான் சுப்பையா கௌரிசாமி அவர்கள் நேற்று (23.01.2022) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் நீலாதாட்சியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற திலக்மோகன், நீதிமதி, நிரஞ்சனா, காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோன்சிவகுமார், அமிர்தநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மிருணாளினி, கீர்த்துஜன், விந்துஸன், இமாஷல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.01.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமதி (மகள்) - 077 618 9260
நிரஞ்சனா (மகள்) - 077 852 0683
காயத்திரி (மகள்) - 074 181 3627

கோண்டாவில் மேற்கு

தகவல் : குடும்பத்தினர்

(9809)

# Jaffna Central College

## Rs. 1.68 Million Valued Pon. Vipulananthan (Vipul) Memorial Scholarship

**For Outstanding Students in GCE Advanced Level**

Sponsored by

**Jaffna Central College 1987 A/L Alumni**

யாழ்.மத்திய கல்லூரியின் 1987 (உ/த) பிரிவு மாணவர்களின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் யாழ்.மத்திய கல்லூரியின் க.பொ.த (சா/த) - 2020இல் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் பன்னிரண்டு மாணவர்களுக்கு தலா 140,000/- ரூபாய் வீதம் 1.68 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

**காலம் :** 26.01.2022 புதன்கிழமை காலை 9.00 மணி
**இடம் :** தந்தை செல்வா கலையரங்கம், யாழ்.மத்திய கல்லூரி

**தலைவர்**
Dr. S.K. எழில்வேந்தன்
Principal, Jaffna Central College

**பிரதம விருந்தினர்**
Dr. T. மங்களேஸ்வரன்
Vice - Chancellor, University of Vavuniya

**சிறப்பு விருந்தினர்கள்**

Dr. S விஜயமோகன்
Senior Lecturer,
University of Vavuniya

திரு. R.L. சொலமன்
President, Jaffna Central College
Old Boys Association

**புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் விபரம்**

| No | Name of the Student | Result | No | Name of the Student | Result |
|---|---|---|---|---|---|
| 01 | Nagarajah Hareeshan | 9A | 08 | Jegatheepan Ajal | 6A3B |
| 02 | Raghavan Senthan | 9A | 09 | Naguleswaran | |
| 03 | Vinayakaselvam Arthikan | 8AB | | Nirushan | 6A3B |
| 04 | Jeyakkumaran Sinthujan | 8AC | 10 | Jeyarajah | |
| 05 | Peter Sures Gerecshan | 8A | | Shanmugapiryan | 6A2B |
| 06 | Vijayaranjan Sarujan | 7A2B | 11 | Thatheeswaran | |
| 07 | Daniel Ramraj Poul | | | Thashwin | 5A2BS |
| | Paramathayalan | 6A3B | 12 | Remisius Benaya | 5AB2CS |

மேலும் க.பொ.த.(சா/த) 2017 இல் 9A சித்திகளைப் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவன் ச.தேனுஜன் அவர்களுக்கு Mega Scholarship JCC – A/L புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினூடாக திரு.K.கலாவண்ணன் (U.K) அவர்களினால் வழங்கப்பட்ட Rs.140,000.00 பெறுமதி கொண்ட புலமைப்பரிசிலினை பெற்று க.பொ.த. (உ/த) 2020 இல் 3A எனும் மிகச் சிறந்த பெறுபேற்றை பெற்றதோடு மாவட்ட மட்டத்தில் 5ம் நிலையினைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவதுறைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

க.பொ.த.(சா/த) 2018 இல் 9A சித்தியினை பெற்ற P.கிரிசரண் மற்றும் P.குணராஜ் ஆகிய இரண்டு மாணவர்களுக்கு Mega Scholarship JCC - A/L புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் Dr.சபீல்சலீம் (U.K) மற்றும் திரு.K.P.ரஜீவன் (U.K) அவர்களால் தலா Rs.140,000.00 புலமைப்பரிசில் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், யாழ்.மத்திய கல்லூரியின் U.K பழைய மாணவர் சங்கத்தினால் க.பொ.த. (சா/த) - 2022 தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு புள்ளிகளின் அடிப்படையில் முதல் 12 மாணவர்களுக்கும் மற்றும் பிரிவு ரீதியாக 18 மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 30 மாணவர்களுக்கு தலா 24000.00 ரூபாய் வீதம் Rs.720,000.00 பெறுமதியான புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இதனைவிட ஏனைய பழைய மாணவர் சங்கத்தினாலும் பழைய மாணவர்களினாலும் பல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்" (9766)

திரு.ம.வித்தியானந்தநேசன் M.Phil.
Coordinator, Scholarship Programme, J.C.C

தொ.பே:-077 7642 379

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1944.06.03

மறைவு
2022.01.22

எமது பேரன்பகலா நண்பன் மார்க்கண்டு விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர். திருமதி. திரவியம் மார்க்கண்டு
## (திரவியம் ரீச்சர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்ப உறவுகளின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிப்பு: இறுதிக்கிரியைகள் அன்னாரது சாமியன் அரசடி, கரவெட்டியில் உள்ள இல்லத்தில் இன்று திங்கட்கிழமை (24.01.2022) நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

( C-3610)

பிரிவால் துயருறும் நண்பர்கள்

த.புருசோத்தமன் (UK), பு. கேஷசன் (UK) ந.பிரதீபன், ச.தயானந்த, க.ஆனந்தசங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 14 . 08 . 1940

இறப்பு 20 . 01 . 2022

கடந்த 20.01.2022 அன்று சிவபதமடைந்த

## அமரர் ஞானேஸ்வரி நடராசா (கிளி)

(திருமகள் வீதி, அரியாலை)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிட்னி,
அவுஸ்திரேலியா.

கார்த்திகேசு குணரத்தினம்
குடும்பம்

(9811)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# சிநேகபூர்வ துடுப்பாட்ட போட்டி

## கொழும்பு நாலந்தா எதிர் யாழ்.மத்தி

### கொழும்பு நாலந்தா கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி



கொழும்பு நாலந்தா கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற துடுப்பாட்ட போட்டியில் கொழும்பு நாலந்தா கல்லூரி இன்னிங்சாலும் 104 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றுள்ளனர்.

கடந்த 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 44.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்ட ங்களை பெற்றனர்.

சாரங்கன் 58 பந்துகளில் 39 ஓட்டங்களையும், விதூஸன் 49 பந்துகளில் 10 ஓட்டங்களையும், சன்சயன் 80 பந்துகளில் 23 ஓட்டங்களையும், கௌதம் 8 பந்துகளில் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

நாலந்தக் கல்லூரியை சேர்ந்த ஜனுலா இன்ருசரா 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சஜிதா விதானகே 24 ஓட்டங்களு க்கு 4 விக்கெட்டுக்களையும் , மய்நட் கல் டிரா 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நாலந்தா கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 88 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 297 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

ந்சிரு விலோசன 52 பந்துகளில் 29 ஓட்டங்களை யும் கே. சில்வா 219 பந்துகளில் 85 ஓட்டங்களையும், சனுல் அத்துக் கொறல்ல 150 பந்துகளில் 80 ஓட்டங்களையும், எறன்கா ஜெயக் கொடி 36 பந்துகளில் 25 ஓட்டங்களையும் , டி. சமரவீர 29 பந்துகளில் 36 ஓட்ட ங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி சார்பாக நியூட்டன் 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கௌதம் 83 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கவிதர்ஸன் 63 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களை பெற்றனர்.

முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக விதூஸன், கெவின் ஜோடியாக 49 ஓட்டங்களையும் , விதூஸன் 42, கெவின் 07 ஓட்டங்களையும் பகிர்ந்து கொண்டனர் என்பது குறிப் பிடத்தக்கது. T.கௌதம் ஆட்டமிழக்காது 28 பந்துகளில் 20 ஓட்டங்களையும் A.கஜன் 10 பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நாலந்தாக் கல்லூரி சார்பாக M.கல்ஙரா 52 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் S.விதானகே 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப் போட்டிக்கு என். சுதேஸ் குமார், ஆர். சிறிறமணன் மத்தியஸ்தர்களாக கடமை ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

(4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2495

### விதுர்ஷா

அண்ணே காபி , டீ , ஹார்லிக்ஸ் என்ன வேணும்?



கிரீன் டீ குடுங்க... வித்தவுட் சுகர்...
அண்ணனுக்கு ஒரு டம்ளர் சுடுதண்ணி...

### கலைவாணி

கணவன்- என் மனைவி என்கிட்ட
சரியாவே பேசமாட்டேங்கிறாள்



ஜோசியர்- ஆயிரத்துல ஒருத்தனுக்குத் தான்
இப்படி அமையும், அதிர்ஷ்டசாலி நீ.

### ஜிந்துஜா

அம்மா- ஆராரோ ஆரிரரோ என் செல்ல
குட்டி கண்ணுறங்கு, ஆராரோ ஆராரோ ஆரிரரோ...



குழந்தை- பேசாம தூங்க விடுரியா
இல்ல எந்திரிச்சு போகவா?

### தனோஜ்

2025 கொரோனா முடியும் போது....



### நிந்துஜன்

ஒரு பொண்ணு பொங்கல் எப்பிடிப்
போச்சுன்னு கேட்டிச்சு



வாய்வழியாதான்னு சொன்னேன்...
கண்டபடி திட்டிட்டு போகுது...

### தியாளன்

ஒரு பக்க கிட்னியை வித்து புல்லட்
வாங்கிய நேபாளி!



அடேய்... பெட்ரோல் போட இன்னொரு
கிட்னியையும் விற்கனுமேடா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மாக்கு தட்டுப்பாடு ஏற்படாது



(கொழும்பு)

பால்மா இறக்குமதியாளர்களுக்கு போதுமான அளவு டொலர்கள் வழங்கப்பட்டுள்ளதால் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இதனால், சந்தையில் பால்மாக்கான தட்டுப்பாடு இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஓரிரு மாத காலமாக நாட்டில் நிலவும் பால்மாத்தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (4)

# பதவிக்காலம் நீடிக்கப்படாது

# தேர்தல் நடத்தப்படும்

## நாமல் உறுதி

(கொழும்பு)

**தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதில் ஆளும் கட்சிக்கு விருப்பமில்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கம்பஹா பிரதேசத்தில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதிக்கு தனது பதவிக்காலத்தை நீடிக்கும் தீர்மானமில்லை. நாங்கள் உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார் .



அடுத்த 3 வருடங்களுக்கு மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றுவோம். எங்களுக்கு பதவி காலத்தை நீடிக்க எந்த அவசியமும் இல்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (4)

## புதிய அமெரிக்க தூதுவர் நியமனம்



(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்து தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக இவர் அமெரிக்க வெளியுறவு ஆலோசகராகவும் இராஜாங்க திணைக்களத்தின் பதில் செய்லாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதற்கு முன்னர் கம்போடியா, தாய்லாந்து, ஈரான், கொலம்பியா, வியட்நாம், ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி.பொன்னுச்சாமி இராசம்மா



எமது சங்கத்தின் உறுப்பினர்களான
கிளி/கிளிநொச்சி ம.வி. அதிபர்
திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம்,
கிளி/ஜெயபுரம் ம.வி. அதிபர்
திருமதி.சிவானந்தி பரதன்
ஆகியோரின் அன்புத் தாயார்
திருமதி.பொன்னுச்சாமி இராசம்மா
இறைபதமடைந்தமையையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(C-3609)

## கண்ணீர் அஞ்சலி

அமரர். திருமதி. சிதம்பரப்பிள்ளை அம்பிகாவதி

எமது சங்கத்தின் உறுப்பினரான
கிளி/ஆனையிறவு சி.த.க.
பாடசாலை அதிபர் திரு.சி.நந்தகுமார்
அவர்களுடைய அன்புத் தாயார்
திருமதி.சிதம்பரப்பிள்ளை அம்பிகாவதி
அவர்கள் இறைபதமடைந்த
மையையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.



அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்.

(C-3608)


# இராசிபலன்

24.01.2022
தை 11, திங்கட்கிழமை
சஷ்டி காலை 6.41 மணிவரை
சப்தமி பின்னிரவு 5.11 மணிவரை
அத்தம் முற்பகல் 9.23 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரட்டாதி

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், சயன சுகக் குறைவான நாள்.




ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மறுவர், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்; மருத்துச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும்.




பிள்ளைகளின் நீண்ட நாளைய கனவுகளை நிறைவேற்றுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் கூடும், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர்களின் வருகையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோவிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலுக்குரிய பிரதேசம் கடல். இதயத்திற்குரிய பிரதேசம் தியானம்.

# சுகாதாரம் பேணப்படாத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட மந்திகைப் பகுதியில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் போது சுகாதார சீர்கேடுகள் இனங் காணப்பட்டு சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பல உணவு கையாளும் நிறுவனங்களில் சுகாதாரம் பேணப்படாமை மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை போன்ற சுகாதாரத்துக்கு விரோதமான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்பொருட்கள் அழிக்கப் பட்டதோடு சட்ட நடவடிக் கைகளுக்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

(5-6-60)

# டெங்கு அபாய எச்சரிக்கை

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு அபாயத்தையடுத்து வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார பிரிவினரால் டெங்கு பரவும் இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், டெங்கு பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த இரு மாதங்களில் 20 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை முன்னெடு க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-250)

# சுவாமி விவேகானந்தர் வருகையின் 125 ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய 125 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இராமகிருஷ்ண மிஷன் பல நிகழ்ச்சிகளை இலங்கை முழுவதிலும் ஏற்பாடு செய்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்திலும் 4 நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியிலும் மறுநாள் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரியிலும் முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியிலும் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலிலும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரும் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி ஹரிவ்ரதானந்த மகா ராஜ்ஜும் கலந்து கொள்வார். (5-6)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சாவகச்சேரிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படிஇரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடை யாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-18)

# மின்சார மோ.சைக்கிள்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் கட்டாயம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் மின்சார மோட்டார் சைக்கிள் களுக்கு இலக்கத்தகடு, வாகன வருமான உத்தரவு பத்திரம், காப்புறுதி, தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளன என வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரொஷன் சந்திரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு இதுவரையிலான காலப்பகுதியில் தலைக்கவசம் உட்பட மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தேவையின்றி காணப்பட்டன.

இந்நிலையில் இனிவரும் காலங்களில் இலக்கத்தகடு, வாகன வருமான உத்தரவு பத்திரம், காப்புறுதி, தலைக்கவசம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளதாவும் அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (5-6-250)

வடக்கு , கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பு யாழ். மாவட்டத்திற்கான கிளைக் காரியாலயம் ஒன்றினை வடமராட்சி ஜே/386 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

அத்துடன் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இரண்டிற்கு தலா 5000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்- மகாலிங்கம்)



# குறை'களை' பதிகம்

## வீதிகளில் குப்பை கொட்டும் குப்பைகளுக்கு...



அன்பு மிகு,
வீதிகளில் குப்பை கொட்டும்
குப்பைகளே!
உம் வீட்டுக் குப்பைகளை
வீதியில் கொட்டுவதென்றால்
உம்மைக் கொட்டுவது
எந்த வீதியில்...?

நெஞ்சத்தூய்மை எது?
சூழல் தூய்மையே அது.

வீட்டுக் குப்பையை பையில் இட்டு
ஸ்கூட்டிப் பப்பின்
காலடியில் அதை வைத்து
கண்ட இடத்தில்
தட்டிவிட்டுச் செல்லும்
நெஞ்சற்ற மனிதரே!
நேர்மை எது என்பதை
யாரிடம் கற்றீர் நீர்?

சுத்தம் சுகம் தரும் என்போம்
சுகாதாரம் எதுவென்பது
எம் வீட்டுக் குப்பையை
வீதியில் கொட்டுவதா?

வீதிகளில் கிடக்கும் குப்பைகளில்
மழைநீர் தேங்கி
டெங்கு நுளம்பு பெருக்கெடுத்து
உம்மையும் உம் குடும்பத்தாரையும்
விட்டு வைத்தா
மற்றவரைக் குத்தும்?

எந்தக் கழிவெனினும்
தரம்பிரித்துத் தாருங்கள்
அதை எடுக்க நாம் தயார் என
நாள் சொல்லி, நேரம் சொல்லி
வாகனம் உம் வீட்டு வாசல்வரை வருகிறதே
பிறகேன் இப்பின்புத்தி உமக்கு?

"தயவுடன் குப்பை கொட்டாதீர்"
என்ற வாசக அட்டையின் கீழ்
குவிந்து கிடக்கும் குப்பைகள்
சொல்லும் பாடம் என்னவோ?

ஓ... இறைவா!
எமக்கு மனிதமும் தெரியாது!
மனிதாபிமானமும் தெரியாது!
கண்டதே காட்சி
கொண்டதே கோலம்
என்பதே எம் கொள்கை


கொட்டுவோம்
எவ்விடத்திலும் குப்பைகளைக் கொட்டுவோம் எனும்
சுயநல மனிதர் திருந்தாதவரை
வீதிகள் குப்பைத் தொட்டிகளாகவே கிடக்கும்

கொள்ளை நோய்கள்
தலைவிரித்தாட்டும்
எமக்கென்ன
எம் வீடு சுத்தமாயிருந்தால் சரி
எம் வீதி குப்பையானாலென்ன
எம் ஊர் குப்பையானாலென்ன
எம் தேசம் எக்கேடு கெட்டுப் போனாலென்ன
இதுதான் இன்றைய நிலை

அன்புடன்,
குப்பை கொட்டும் குப்பைகளே
இங்கு குப்பை கொட்டாதீர்...

மாவை. நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் முதல் முறையாக டராஸ் ஒன் லைன் வர்த்தக நிறுவனம் நடத்திய Drone Show நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்றது. இது இலங்கையருக்கு புது அனுபவமாக அமைந்துள்ளது.

# ராஜபக்ஷ தரப்பிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது

## சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

ராஜபக்ஷக்களிடத்தில் இனியும் நீதி, நியாயத்தினை எதிர்பார்க்க முடியாது எனவும் உடனடியாக சர்வதேசத்தின் தலையீட்டைக் கோரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் புரையோடிப்போயிருக்கும் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதை தவிர்த்து ஏனைய அனைத்து விடயங்களையும் கையாள முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகற்கனவு கண்டு கொண்டிருக்கின்றார் என்றும் அவர் பகிரங்கமாக சாடியுள்ளார்.

மேலும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையினால்தான் போர் இடம்பெற்றது என்பதை ஜனாதிபதி மறந்து விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் போரின் காரணமாகவும் அக்காலத்தில் ஆயுதக் கொள்வனவுகளில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் காரணமாகவுமே நாடு மீள முடியாத பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 2<br>கி.பா: சூரி 2 செவ் 3இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: NCT Eng./சுவிஸ் Not PR<br>எதிர்பார்ப்பு: சுவிஸ் மட்டும்<br>தொ.இ: B/6980 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா:40 சூரி 11 செவ் 7இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:விஞ்ஞான பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/6993 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா:25 சூரி 4 செவ் 7இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: A/L சொந்தத்தொழில்<br>தொ.இ: B/6988 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:பரணி 3<br>கி.பா:- சூரி.செவ் 4இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: உயர்தரம் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு:விவாகரத்துப்பெற்று 15 வயதில் ஒரு பெண் குழந்தை உண்டு (லண்டன் மட்டும்)<br>தொ.இ:G/6994 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:-சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Dip in Engineering (Tech) TO<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்<br>தொ.இ: B/12201 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 2<br>கி.பா:13 ½ சூரி 9 செவ் 12இல் உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/6995 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்:5'4"<br>கி.பா: சூரி 3 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்:O/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12204 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா:- சூரி 3 செவ் 1 இல்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்:அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/6998 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.




இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட தென்கொரிய சபாநாயகருக்கான நினைவுப் பரிசில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (படம்:சுபேசன்)

# இலங்கை ஆசிரியர் சங்கம் இன்று போராட்டம்

(கொழும்பு)

மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களுக்கு நீண்ட காலமாக நியமனம் வழங்கப்படாமையை கண்டிக்கும் வகையில் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மத்திய மாகாண ஆளுநரின் தன்னிச்சையான தீர்மானங்கள் காரணமாக, இந்த நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 300இற்கும் அதிக ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ள போதிலும், இந்த நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், குறித்த ஆசிரிய உதவியாளர்களுக்கு உடனடி நியமனத்தை வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி, இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (4)

# இறுதி செய்யப்பட்டது புதிய அரசியலமைப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக வரைவொன்றை உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நிபுணர்கள் குழு அப்பணியை நிறைவு செய்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழுவொன்று புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வரைபினை தயாரித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவைக்கு கையளிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தது.

கொரோனா நெருக்கடிகளுக்கு மத்தியில் சுமார் ஒருவருடத்திற்கும் மேலாக நடைபெற்ற செயற்பாடுகளின் அடிப்படையில் தற்போது இக்குழுவானது தனது வரைவினை இறுதி செய்துள்ளது.

இந்த வரைபில் அரசியல் கட்சிகளினால் முன்மொழியப்பட்ட விடயங்கள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் ஆகியன உள்ளடக்கத்தில் உள்ளதாக அறிய முடிகின்றது. (4)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி. மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா
B.Com,PGDM, M.Ed, பிரதி அதிபர்

Best Wishes

திரு. பொன்னம்பலம் கேதீஸ்வரன்
B.A (hons) PGDM, M.A, M.Ed, ஆசிரியர்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணிப்பட்ட கற்கை அலகின் 13 ஆவது அணியில் M.Ed பட்டத்தைப் பெற்ற எமது கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா, ஆசிரியர் திரு. பொன்னம்பலம் கேதீஸ்வரன் ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமை கொள்கிறது.

(9807)

சமூகம், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசிக்கு எதிராக பிரான்ஸில் போராட்டம்




(பாரிஸ்)

**தடுப்பூசி செலுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**

கொரோனா வைரஸால் மிகவும் மோசமாக பாதிப்பை சந்தித்த ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸூம் ஒன்று.

அங்கு ஏற்கனவே கொரோனா வைரஸின் 3 ஆவது அலை கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் சூழலில் 4ஆவது அலை எந்த நேரத்திலும் உருவாகலாம் என சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன்காரணமாக கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி இமானுவேல் மக்ரான் தலைமையிலான அரசு நாடு முழுவதும் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது.

கொரோனாவிற்கு எதிராக தடுப்பூசி சரியான ஆயுதம் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தி வரும் நிலையில் பல்வேறு நாடுகள் கொரோனா தடுப்பூசி திட்டத்தை விரைவுபடுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக பிரான்ஸ் அரசு தடுப்பூசி போட்டுக்கொள்ள, மக்களை பல்வேறு வழிகளில் கட்டாயப்படுத்தி வருகிறது.

இந்தச் சூழலில் அரசின் கட்டுப்பாடுகள் தங்களின் சுதந்திரத்தை பறிப்பதாக கூறி அந்த நாட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த உத்தரவுக்கு எதிராக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 38 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (4)

# அகதிகள் தடுப்பு மையம் மீது விமானத் தாக்குதல்

## 60 பேர் உயிரிழப்பு

(சனா)

ஏமன் நாட்டில் ஜனாதிபதி மன்சூர் ஹாதி அரசு படைகளுக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக வான் வழியாகவும் தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்நிலையில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள சாதா மாகாணத்தில் நேற்று விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில், அகதிகளுக்கான தற்காலிக தடுப்பு மையத்தில் தங்கியிருந்த தென் ஆபிரிக்க அகதிகள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

அங்கு மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என கருதப்படுகிறது. (4)

# அமெரிக்காவிற்குள் நுழைய முயன்ற குடும்பம் பனியில் உறைந்து உயிரிழப்பு

(வோஷிங்டன்)

கனடா மற்றும் அமெரிக்க எல்லை மாகாணங்கள் கடும் பனிப்புயலால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கனடா நாட்டின் எமர்சன் எல்லைப் பகுதியில் வாகனம் ஒன்றில் உயிரிழந்த நிலையில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒரு குழந்தை உட்பட நான்கு பேரின் உடல்களை மானிடோபா எல்லைப் பாதுகாப்பு படையினர் மீட்டுள்ளனர்.

அவர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மானிடோபா மாகாணத்தில் இருந்து அமெரிக்காவிற்குள் அவர்கள் நுழைய முயன்றதாகவும் முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எல்லைப்பகுதியில் வெப்பநிலை 35 டிகிரிக்கு கீழ் சென்றுவிட்ட நிலையில் பனியில் உறைந்து அவர்கள் உயிரிழந்துள்ளது தெரியவந்துள்ளது.(4)

# பரோல் நீடிப்பு



(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்த பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட பரோல் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது.

பேரறிவாளனின் பரோல் இன்று முடியும் நிலையில், 9ஆவது முறையாக மேலும் ஒரு மாதம் நீட்டித்து தமிழக சிறைத்துறை உத்தரவிட்டுள்ளது.

அவரது உடல்நிலை கருதியே பரோல் நீடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் பேரறிவாளன். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். (4)

# பனிப்பாறை உருகியதில் ஒரே நாளில் கடலில் கலந்த 150 கோடி தொன் நீர்



(அட்லாண்டிக்)

ஏ-68 என்கிற மிகப்பெரிய பனிப்பாறை உருகுவதால் ஒரே நாளில் 150 கோடி தொன் தண்ணீர் அட்லாண்டிக் பெருங் கடலில் கலந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பிரிட்டனில் உள்ள மொத்த மக்கள் தொகையும் ஒரு நாளில் பயன்படுத்தும் நீரைப் போல 150 மடங்கு அதிக தண்ணீர் இதன் மூலம் ஒரே நாளில் கடலில் கலந்தது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஏ-68 பனிப்பாறை [illegible] டார்டிகாவிலிருந்து பிரிந்து, தெற்கு பெருங்கடல் வழியாக வடக்கு நோக்கி பயணித்து, தெற்கு அட்லாண்டிக் கடலை வந்தடைந்தது.

லீட்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று, செயற்கைக் கோளின் தரவுகளைக் கொண்டு அப்பனிப்பாறை பயணித்த வழித்தடம் முழுக்க அதன் உருவம் எப்படியெல்லாம் மாறியது என்பதைக் கணக்கிட தேவையான தரவுகளை சேகரித்து வருகிறது.

[illegible] பனிப்பாறையின் பயணத்தில், அது உருகும் விகிதம் எப்படி மாறுபட்டது என்பதை மதிப்பிட முடிந்தது.

ஏ-68 பனிப்பாறை அதன் கடைசி காலத்தில், பிரிட்டிஷ் - சவுத் ஜோர்ஜியா என்கிற வெப்பமான பகுதிக்கு வந்தடைந்தது.

ஏ-68 பனிப்பாறை கண்டத்தின் நிலப்பரப்பின் மீது மோதியது போலத் தான் தெரிகிறது. அப்போது தான் பனிப்பாறை திரும்பி, சிறு துண்டு உடைவதைக் கண்டோம்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் ஏ-68 பனிப்பாறை, கண்காணிக்க முடியாத அளவுக்கு எண்ணற்ற சிறிய துண்டுகளாக உடைந்தது.

அப்பனிப்பாறைகள் வெளியிடும் நன்னீர், கடலின் நீரோட்டத்தை மாற்றும். மேலும் இரும்பு போன்ற தாதுப் பொருட்கள், நுண்ணுயிரிகள் கடலில் கலந்து உயிரி உருவாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (4)

# சீனாவில் நிலநடுக்கம்



(பீஜிங்)

சீன நாட்டில் வடமேற்கே அமைந்துள்ள குயிங்காய் மாகாணத்தில் டெலிங்கா நகரில் நேற்று பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கம் ரிக்டரில் 5.8 ஆக பதிவாகியுள்ளதாக சீன நிலநடுக்க நெட்வேர்க் மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலநடுக்கம் 8 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. நிலநடுக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

கடந்த 12 ஆம் திகதி குயிங்காய் மாகாணத்தில் மென்யுவான் கவுன்டி பகுதியில் ரிக்டரில் 5.2 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஒரே மாதத்தில் குயிங்காய் மாகாணத்தில் 2ஆவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒற்றையாட்சிக்குள் முடக்க சதி

## கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை ஒற்றையாட்சிக்குள் முடக்குகின்ற சதி முயற்சியை முறியடிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் சிவில் சமூகங்களும் இணைந்து முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம் என கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி, அதன் முதல் கட்டமாகஎதிர்வரும்30 ஆம்திகதி யாழில் நடைபெறும் எதிர்ப்பு போராட்டம் முதலாவது நடவடிக்கையாக அமையும். அதன் பின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விழிப்புணர்வு போர்ராட்டம் நடைபெறும்.

அதன் பின் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடுவீடாகச்சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.


யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேசியத்தை நேர்மையாக நேசிக்கும் அனைத்து தரப்புக்களுடனும் சேர்ந்து இந்த முயற்சியை முன்னெடுக்க விரும்புகின்றோம் எனக் கேட்டிருந்தோம்.

அதே கோரிக்கையை நாம் வவுனியாவிலும் கோருகின்றோம்.

சர்வதேச ரீதியில் இலங்கையில் இருக்கக் கூடிய அனைத்து மக்கள் கூட்டங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பு நிறைவேறுவது அத்தியாவசியம் என்றும் அப்படி அனைத்து தரப்புக்களும் ஏற்றுக் கொள்ளும் அரசியலமைப்பு ஒன்று நிறைவேற்றப் பட்டால் தான் விசேடமாக தமிழ் தரப்புக்கு இனப்பிரச் சினை தீர்க்கப்பட்டதாக கருத்தப்படும்.

. எனவே தமிழ் தேசத்தின் நலன் கருதி இந்த தமிழ் தேசத்தை நேசிக்கும் ஒவ்வொரு தரப்பும் எம்மோடு கைகோர்த்து இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும் என உரிமையோடு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.(4-6-250)

# இராணுவ வாகனம் தடம்புரண்டதில் இருவர் படுகாயம்



(குருமன்காடு)

கிளிநொச்சி - முறிகண்டிப் பகுதி ஏ-9 வீதியில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இராணுவ வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

இரணைமடு பகுதியிலிருந்து ஏ-9 வீதியூடாக முறிகண்டி நோக்கி பயணித்த இராணுவ வாகனம் முறிகண்டி பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டு வாடிகாலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் இராணுவ வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்ததுடன் மேலதிக விசாரணைகளை முறிகண்டி காவல் அரண் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4-5-250-316)



கிளிநொச்சி மருத்துவமனையில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று முன்தினம் பார்வையிட்டார். (படம்:-சப்தசங்கரி)

# கிளிநொச்சியில்

# எரிந்த நிலையில் சடலங்கள் மீட்பு; கொலை என பொலிஸார் சந்தேகம்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை தாயும் மகளும் எரிந்த நிலையில் சடலமாக் மீட்கப்பட்ட இடத்திற்கு கிளி நொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் நேற்று முன்தினம் சென்று குறித்த சடலங்களை பார்வையிட்டார்.

குறித்த இரு சடலங்களுக்கும் பிரேத பரிசோதனை மேற் கொள்ளுமாறு உத்தர விட்ட நிலையில் சடலங்கள் கிளி நொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

சம்பவம் இடம்பெற்ற இடத்தை ஆராய்ந்த தடயவியல் பொலிஸார் ஒரு போத்தலில் பெற்றோல்,. கத்தி, கையடக்க தொலைபேசி என்பவற்றை மீட்டுள் ளனர்.

குறித்த சம்பவத்தை கொலை என சந்தேகிப்பதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(4-5-100-316)

# பெரும்போக நெல் அறுவடையில் பாரிய வீழ்ச்சி-விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம்முறை பெரும்போக நெல் விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை மற்றும் களைநாசினி, கிருமிநாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன்படுத்த முடியாத நிலை போன்ற காரணங்களினாலேயே இம்முறை தமது பெரும்போக நெற்செய்கை விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பினால் அறுவடை இயந்திரக்கூலி முன்பை விடத் தற்போது அதிகரித்துள்ளமையால் ஏக்கர் ஒன்றிற்கு ஒன்பதாயிரம் தொடக்கம், பத்தாயிரம் வரையில் அறுவடை இயந்திரக்கூலியாக வழங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட நெல்லினை சந்தைப்படுத்துவதிலும் பல வேறு ஈடர்பாடுகளுக்கு தாம் முகங்கொடுப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் அனைவரும் நெல் அறுவடையில் ஈடுபடுவதால் நெல் உலரவிடும் தளங்களை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

ஆகவே முல்லைத்தீவு விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில், பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். (5-6)

# சான்றுப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் சான்றுப் பொருட்களாகவுள்ள CC 08 26257 மற்றும் 07147 இலக் கம் பொறிக்கப்பட்ட சிவப்பு நிற CFAN வகை கையுழவு இயந் திரம், மற்றும் MP MQ-8024 இலக்கம் பொறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரத்தை காட்டி பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி சான்றுப் பொருட் கள் ஏல விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# இனந்தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்கானவர் மருத்துவமனையில்

(தருமபுரம்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் தொழில் புரியும் நபர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை தொழில் நிமித்தம் சென்ற போது புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் இனம்தெரியாத 6 பேர் கொண்ட குழுவினரால் சரமாரியாக வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கானார்.

இந்நிலையில் படுகாயமடைந்தவர் தருமபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் பு.மோகனவதனர் (வயது-28) எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம்தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பகுதியில் அண்மைக் காலமாக பல்வேறு வகையான குற்றச்செயல்கள்,தற்கொலை, வாள்வெட்டு,வழிப்பறிக்கொள்ளை என பல குற்றச் செயல்கள் நடைபெற்று வருவதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-6-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமெடுக்கும் டெங்கு

## 5,500 தொற்றாளர்கள் பதிவு

(கொழும்பு)

**ஜனவரி 1 முதல் நேற்று வரை 5,500 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**



மொத்த வழக்குகளில் 60% மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டு ப்பாட்டுப் பிரிவு தெரிவித்து ள்ளது.

அத்தோடு காலி மற்றும் குருநாகல் பிரதேசங்களிலும் கணிசமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்தது.

இந்நிலையில், 2021 செப்டெம்பர் மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரை டெங்கு வழக்குகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது.

அந்த வகையில், செப்டெம்பரில் 1,370 பேர், ஒக்டோபரில் 2,979 பேர், நவம்பரில் 4,561 பேர், டிசெம்பரில் 8,096 பேர் என்ற வகையில், டெங்கு வழக்குகள் பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

## எதிரிகளை வெல்லும் வரம் தரும் நரசிம்மர்



இதை முறையாக கடைப்பிடித்தால் 48 நாட்களுக்குள் எண்ணிய செயல் கைகூடும். பின்னர் நரசிம்மர் கோவிலுக்கு சென்று, சுவாமிக்கு நெய் தீபம் ஏற்றி துளசி மாலை சாத்தி வழிபட வேண்டும். இதனால் கடன் சுமை குறையும். நோய் குணமாகும். திருமணத் தடை அகலும். குழந்தை பாக்கியம், வேலைவாய்ப்பு கிடைக்கும். வேலையில் இடைஞ்சல் அகலும்.

**ஸ்ரீநரசிம்மர் காயத்ரி**

ஓம் வஜ்ரநகாய வித்மஹே
தீஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நாரஸிம்ஹ ப்ரசோதயாத்.

இந்த மந்திரத்தை உச்சரித்தால் எதிரிகளை வெல்லலாம்.

**நரசிம்மரை வழிபட உகந்த நேரம்**

நரசிம்மரை வழிபட்டால் பரமேஸ்வரன்-பார்வதியை வழிபட்ட பலன் கிடைக்கும். சுவாதி நட்சத்திரம் வாயுவின் நட்சத்திரம்.

வாயுதேவர் எவ்வளவு வேகத்தில் வருகிறாரோ, அதே வாயு வேகத்தில் வந்து நம்மை பாதுகாத்து அருள்புரிவார் என்பது ஐதீகம்.

நரசிம்மரை வழிபடுவதால் ஜாதகத்தில் ராகுவினால் ஏற்படும் தடைகள், பிரச்சினைகள் நீங்கி நன்மைகள உண்டாகும். நரசிம்மர் அவதாரம் எடுத்தது மாலை வேளையில் (பிரதோஷ காலம்) ஆதலால் சுவாதி நட்சத்திரத்தில் மாலை வேளையில் நரசிம்மரை வழி படலாம்.

அதாவது பிரதோஷ வேளை (சூரியன் மறைவதற்கு முன் 1.30 மணியும், பின் 1.30 மணியும்) ஆக மொத்தம் மாலை 4.30 முதல் 7.30 வரை 3 மணி நேரம் நரசிம்மரை வழிபட உகந்த நேரம்.

சதுர்த்தசி, சித்திரை மாத வளர்பிறை, அட்சஷ திருதியை வழிபாடும் சிறப்பானதாகும்.

**அட்ட நரசிம்ம தலங்கள்**

1. அந்திலி 2. சிங்கர் கோவில் 3. சிங்கப்பெருமாள் கோவில் 4. சிந்தலபாடி 5. சோளிங்கர் 6. நாமக்கல் 7. பலிக்கல் 8. பூவரசன் குப்பம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## தங்கத்தின் விலை உச்சம் தொடும்

(கொழும்பு)

இலங்கையில் தங்கத்தின் விலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை 115,200 ரூபாய்க்கும், 24 கரட் தங்கம் 124,500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

உலகில் பல நாடுகளில் கொவிட் தொற்று பரவல் ஆரம்பித்ததை தொடர்ந்து தங்கத்தின் விலையிலும் தொடர்ச்சியாக அதிகரிப்பு பதிவாகி வருகின்றது.

இதற்கமைய, தங்கத்தின் விலையானது அடுத்த 12 - 15 மாதங்களில் உச்சம் தொடலாம் என நிபுணர்கள் கணித்துள்ளனர். (4)

## குடும்பஸ்தர் வெட்டி படுகொலை

(கொழும்பு)

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனச் சூரியவெவப் பொலிஸார் தெரிவித்தனர்.

முவன்பெலஸ்ஸ, சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்த 62 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். கடன் விவகாரமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

படுகொலையுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 400 |
| தக்காளி | 150 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 50 |
| கோவா | 180 | 130 | 240 |
| கரட் | 420 | 440 | 450 |
| பூசணி | 130 | 130 | 180 |
| புடோல் | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 75 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 150-250 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 230 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 260 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 450 | 500 | 500 |
| லீக்ஸ் | 220 | 230 | 300 |
| பீற்றூட் | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 500 | 650 | 700 |
| முருங்கைக்காய் | 1300 | 1000 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-100 | 70-100 |
| இராசவள்ளி | 240 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 320 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை எழுதச் சென்று கண்ணீருடன் வீடு திரும்பிய மாணவர்கள்

## காரணம் அறிந்து பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொவிட் தொற்று நோயிற்கு மத்தியில் பல முறை பிற்போடப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதற்கமைய பரீட்சைக்கு முகம் கொடுத்த சில பிரதேசங்களின் மாணவர்கள் கண்ணீருடன் அழுது புலம்பிய நிலையில் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே வந்துள்ளனர்.

வெலிமடை கல்வி வலயத்திற்குட்பட்ட விஜயா கல்லூரியில் நடைபெற்ற பரீட்சை நிலையத்தில் முதல் வினாத்தாள் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படாமல் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனால், பரீட்சைக்கு விடையளிக்க போதிய அவகாசம் இல்லாததால், மாணவர்கள் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே வந்து அழுது புலம்பியதாக தெரிய வந்துள்ளது.

சில மாணவர்கள் விடை எழுதும் போது வினாத்தாளை பறித்து சென்றதாகவும் மேலதிக தாள் கேட்ட மாணவர்களை கடுமையாக திட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாக நீதி கோரி பெற்றோர் வெலிமடை - பதுளை பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 150 மாணவர்கள் இந்த நிலைமைக்கு முகம் கொடுக்க நேரிட்டதாக பெற்றோர்கள் குறிப்பிட்டனர். (4)

# 2030 இல் மன்னர் ஆட்சி!

## ஆன்மிகவாதி ஆரூடம்

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் ஒரு மன்னன் அவதரிப்பார் என கொரோனா பாணி தயாரித்த ஆன்மிகவாதியான ரிட்டிகல தேவிந்த ஆரூடம் கூறியுள்ளார்.

இலங்கையில் பாரிய பொருளாதார, கலாசார மற்றும் மனித வளர்ச்சியை நோக்கி அவர் அழைத்துச் செல்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 2030 ஆம் ஆண்டு மன்னரின் வருகையுடன் ராஜபக்ஷ பரம்பரையின் அரசியல் முடிவுக்கு வரும் எனவும் ரிட்டிகல தேவிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

2025 ஆம் ஆண்டு மீண்டும் ராஜபக்ஷ தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்றும் அப்போது ராஜபக்ஷ பரம்பரையின் அரசியல் முடிவுக்கு வரும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியினால் நாட்டில் அதிகாரத்தை பெற முடியாது என அவர் குறிப்பிட்டார். (4)

# ராஜபக்ஷ அரசின் இரகசியங்களை வெளியிட ஜயசுந்தர தீர்மானம்

(கொழும்பு)



தனது பிரியாவிடை நிகழ்வில் நடந்த சில சம்பவங்கள் காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர கடும் அதிருப்தியில் உள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர்கள் வருவார்கள் என ஜயசுந்தர எதிர்பார்த்திருந்தார்.

எனினும், அவர்கள் எவரும் வரவில்லை என்ற காரணத்தால் அவர் அதிருப்தியில் உள்ளார்.

இந்நிலையில், ஓய்வுபெற்ற பின்னர் அமைதியாக, ஓய்வு வாழ்க்கையை முன்னெடுக்க ஜயசுந்தர ஏற்கனவே எடுத்திருந்த முடிவை மாற்றிக் கொண்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அவர் அவ்வப்போது ஊடகங்களுக்கு முன்னால் தோன்றி கடந்த கால இரகசியங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (4)

# தங்கம் கடத்திய பெண் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தை நாட்டிற்கு சட்டவிரோதமான முறையில் கடத்தி வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விமான நிலைய சுங்கப் பிரிவினர் முன்னெடுத்த சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த பெண்ணிடம் இருந்து 799 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைதானவர் கண்டியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாய்ச்சொல் வீரர்கள்

நம்மைச் சுற்றியிருப்பவர்களிடையே எதிர்பார்ப்புகளை ஏகமாக்கிவிட்டு பிறகு அவர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கும் பழி பாவம் நமக்கு வேண்டாம்.

இந்தப் பாவத்தை சுமக்காதிருக்கச் சில எளிய வழி முறைகள் இருக்கின்றன.

நம்மால் நேரடியாகச் செய்யக்கூடிய உதவிகளுக்கும் சாதனைகளுக்கும் மட்டுமே நாம் உத்தரவாதம் தர வேண்டும். மற்றவர்களிடத்தில் நமக்குள்ள நம்பிக்கையை வைத்தோ மற்ற சூழ்நிலைகளை வைத்தோ எவரிடமும் வாக்குறுதிகளை நீட்டி விடக் கூடாது.

ஒருவர் உங்களிடம் ஓர் உதவி கேட்டு வருகிறார். நீங்கள் சுபாரிசு செய்வதன் மூலம் அந்த உதவியை உங்களால் உறுதியாகச் செய்து தர முடியும் என்று நம்புகிறீர்கள். இந்த நிலைமையிலும் கூட வார்த்தைகளை ஒரு எல்லையோடுதான் பயன்படுத்த வேண்டும்.

அதாவது, நான் சொன்னால் அவர் செய்யக் கூடியவர்தான். இருப்பினும் அவருடைய நிலமை, சூழ்நிலை என்ன என்று தெரிந்து கொள்ளாமல் நான் ஒன்றையும் உறுதியாக கூற முடியாத நிலை. இது தொடர்பாக அவரை நான் பார்க்கிறேன், பேசுகிறேன், தங்கள் விடயத்தில் என் நேர்மையான முயற்சி உண்டு என்று மட்டும் அளந்து வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

மாறாக ஆய் ஊய் என்று அள்ளிவிடும் அற்பவாதிகளின் பட்டியலில் நீங்களும் சேர்ந்து விடாதீர்கள்.

அப்படி அள்ளி விட , காரியம் ஆகவில்லை என்றால் வெத்து வேட்டு என்றும் வாய்ச் சவடால் பேர்வழி என்றும் நம் பெயரோடு பட்டப் பெயர்களைச் சேர்த்து அழைக்க ஆரம்பித்து விடுவார்கள். இவர் பேசுவதைத் தண்ணீரில் தான் எழுத வேண்டும் என்று பலர் முன் சொல்லி நம்மைக் கேலிக்குரிய பொருளாக ஆக்கிவடுவார்கள்.

இது உதவி செய்யப்போக உபத்திரவமாய் வந்து முடியும் கதையாகிவிடும்.

மாறாக எந்தவிதமான நம்பிக்கையும் அளிக்காமல் முயற்சி உண்டு. முடிவு பற்றி என்னால் உறுதி கூற முடியாது என்ற பாணியில் பேசினால் காரியம் முடியாவிட்டாலும் நம் மீது மற்றவர்கள் வருத்தமுற மாட்டார்கள். அவர் அன்றே சந்தேகமாகத்தான் சொன்னார் என்று நம்மை எண்ணி வியக்கவும் கூடும். காரியம் முடிந்து விட்டாலோ இவர்களின் பாராட்டுரைகளுக்கு அளவே இரா.

அன்று நீங்கள் சந்தேகமாகத்தான் சொன்னீர்கள். நானும் இது முடியுமென்று கனவிலும் எண்ணவில்லை என்றெல்லாம் நேரிடையாகச் சொல்லி மகிழ்ச்சி கொள்வார்கள்.

அடிப்படை உண்மை இதுதான். எதிர்பார்ப்புக்கள் உயர்ந்து விட்ட பிறகு மகிழ்ச்சி என்பது சாதாரணமானது. நம்பிக்கையைக் குறைத்து விட்ட நிலையில் கிடைக்கும் மகிழ்ச்சியோ எல்லையற்றது.

இதைப் புரிந்து கொண்டால் நம்மால் வெற்றிகரமாக இயங்க முடியும் என்பதோடு நற்பெயரும் மிஞ்சும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குரங்கும் பூக்களும்



முதல் போட்டியாளர் கொண்டுவந்த பூக்களை எண்ணிப் பார்த்தார். நூறு பூக்கள் இருந்தன.

இரண்டாம் போட்டியாளரின் பூக்களை எண்ணிப் பார்த்தார். நூற்றிப் பத்து பூக்கள் இருந்தன.

மூன்றாம் போட்டியாளரின் பூக்களை எண்ணிப்பார்த்தார். இருநூறு பூக்கள் இருந்தன.

"அரசே, மூன்றாம் போட்டியாளர்தான் வெற்றி பெற்றார் அவரையே மந்திரியாக நியமிக்கலாம்" என்றார் சாது.

"சாதுவே என்ன போட்டி இது? பூ பறித்தலுக்கும், மந்திரி பதவிக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமே விளங்கவில்லையே" என்றார் அரசர். சாது விளக்கமளித் தார்.

"அரசே! மூவரும் நந்தவனத்தில் நுழைந்தவுடன் அங்கிருந்தவனைப் பார்த்தனர். அதே போலவே முதலாமவன் வேட்டியால் குரங்கை தன் முதுகில் கட்டிக் கொண்டான். பிறகு பூப்பறித்தான்.

முதுகில் இருந்த குரங்கு நெளிந்து கொண்டே இருந்தது. நகத்தால் பிராண்டியது. அவன் கவனம் சிதறிப்போனது. அவனால் நூறு பூக்களை மட்டுமே பறிக்க முடிந்தது.

அடுத்த போட்டியாளன் வித்தியாசமாக செய்யவேண்டும் என்று நினைத்தான். குரங்கை தன் வயிற்றில் கட்டிக் கொண்டான். அவனுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது. ஆனால்கொஞ்சம் பரவாயில்லை. அவனால் நூற்றிப் பத்து பூக்களை மட்டுமே பறிக்க முடிந்தது.

மூன்றாவது போட்டியாளன் சற்று வித்தியாசமாக சிந்தித்தான். தன்னுடைய வேட்டியால் குரங்கை மூட்டையாக கட்டினான்.

நந்தவனத்தில் ஒரு ஓரமாக வைத்தான். அங்கு பூப்பறித்துக் கொண்டிருந்தவனிடம் இந்த மூட்டையை கொஞ்ச நேரம் பார்த்துக் கொள் என்று கூறிவிட்டு பூக்களை பறிக்கத் தொடங்கினான். அதனால் எந்த தொந்தரவும் இல்லாமல் அவனால் இருநூறு பூக்களை பறிக்க முடிந்தது.

மூவருக்கும் கொடுக்கப்பட்ட பணி பூப்பறித்தல். குரங்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட கூடுதல் பொறுப்பு. ஒரு நல்ல நிர்வாகி எல்லா வேலைகளையும் தானே செய்ய வேண்டும் என்று நினைக்கமாட்டான். பணியை பிறரிடம் பகிர்ந்து கொடுப்பான்.

இதனால் கவனம் முழுவதையும் அவனுடைய முதன்மை பணியில் செலுத்த முடிகிறது.

அப்படி செய்யாவிட்டால் எல்லா பணிகளையும் சுமக்கும் அவன் எந்த பணியையும்சிறப்பாக செய்ய முடியாது. அதனால் என்னுடைய தேர்வு மூன்றாம் போட்டியாளன்" என்றார் சாது. சாதுவின் முடிவு ஏற்கப்பட்டது.

(முற்றும்)

# மகாபாரதம்



313

விருஷ்ணிகள் உலக்கையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். தந்தையென்றும், மகன் என்றும் உறவு என்றும் பாராது கடுமையாக இரும்பு உலக்கையால் அடித்துக் கொண்டு மாண்டனர்.

காலத்தின் போக்கை அமைதியாகப் பார்த்து கொண்டிருந்தார் கண்ணன். மண்ணுலகில்தன் வேலை முடிந்து விட்டது என எண்ணினார். பலராமன் தன் உடலை ஒழித்து விட்டுப் பரத்தில் ஐக்கியமானார். கண்ணனும்தன்உடலை மாய்க்கக் கருதினார்.

காந்தாரி முன்னர் இட்ட சாபத்தை நினைத்துப் பார்த்தார். இப்போது தமது உத்தம உலகை அடையும்நேரம் வந்துவிட்டது என உணர்ந்தார்.

கண்ணன் ஐம்புலன்களையும் அடக்கி யோக நித்திரையில் ஆழ்ந் தார். அதனை உணராது ஏதோ விலங்கு என எண்ணி ஜரன் என்னும் வீரன் அம்பை எய்தினான்.

கூரிய முனையை உடைய அந்த அம்பு கண்ணனின் இகலோக வாழ்வை முடிவுக்குக் கொண்டு வந்தது. முனிவர்கள் தொழ ஜோதி உலகு எங்கும்பரவி ஆகாயம் நோக்கிச் செல்ல தம் உலகை அடைந்தார் கண்ணன். அவரை அங்கு இந்திரனும், அஸ்வினி தேவர்களும், ருத்ரர்களும் வசுக்களும் சித்தர்களும் முனிவர்களும் தாழ்ந்து பணிந்து வரவேற்றனர்.

தாருகன் அஸ்தினாபுரம் சென்று விருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் மாண்ட செய்தியை தெரிவித்தான். உலக்கையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு இறந்தனர் என்ற செய்தி அறிந்து அஸ்தினாபுரம் திடுக்கிட் டது.

கண்ணனைக் காணலாம் என்று வந்த அருச்சுனன் ஏமாற்றம் அடைந்தான். அவன் அங்கு வரும் முன் பரமாத்மா தனது உலகமான பரலோகத்தை அடைந்து விட்டார். துவாரகை மயான பூமியாய் காட்சி அளித்தது.

கண்ணன் இல்லாத துவாரகையையும் கணவனை இழந்து துடிக்கும் பெண்களையும் கண்ட அருச்சுனன் மயங்கி வீழ்ந்தான்.

பார்த்தனைப் பார்த்த ருக்மணியும் சத்யபாமாவும் "ஓ"வென கதறி அழுதனர். மயங்கி வீழ்ந்தவன் மயக்கம் தெளிந்ததும் யாவரும் ஒன்றும் பேசாது மௌனமாக நின்றனர்.

அவர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறிய அருச்சுனன் அவர்கள் அனைவரையும் பாதுகாக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டான்.

பலராமர், கண்ணன் ஆகியோர் சடலங்களைக்கண்டெடுத்து எரியூட்டி ஈமச் சடங்குகளை முறையாகச் செய்து முடித்தான்.

### காலம் நெருங்குகிறது

அநாதைகளாகிவிட்ட பெண்களையும், குழந்தைகளையும்அழைத்துக் கொண்டு அருச்சுனன் அஸ்தினாபுரம் சென்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் தவறுகளைக் கண்டு, தன் தவறுகளைத் திருத்திக் கொள்கிறவன்தான் அறிவாளி.
- ப்ளூடார்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எது தீர்வு? அதை எப்படி அடைவது? அது எப்போது கிடைக்கும்?

மன்னன் ஒருவருக்கு எழுந்த சந்தேகம் இது. தனது சந்தேகத்தைத் தீர்க்குமாறு ஆஸ்தான புலவருக்குக் கட்டளையிட்டார்.

கடவுள் எங்கே இருக்கிறார்? எத்திசை நோக்கி இருக்கிறார்? என்ன செய்கிறார்? இந்தக் கேள்விகளுக்கு உரிய பதில் தர வேண்டும்.

இல்லையேல் தலை துண்டிக்கப்படும் என்று உத்தரவிடுகின்றான்.

ஆஸ்தான புலவர் அதிர்ந்து போனார். சோகத்துடன் தன் வீட்டுக்குச் சென்றார். புலவரின் முகம் வாடியிருப்பதை அவதானித்த அவரின் பேர்த்தி தாத்தா என்ன குழப்பம் என்று கேட்கிறாள்.

அந்தச் சிறுமியின் கேள்விக்கு மன்னருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் புலவர் பதிலாகத் தெரிவிக்கின்றார்.

அட! இதுதான் சந்தேகமா? நாளை நானே அரண்மனைக்குச் சென்று மன்னரின் சந்தேகத்தை தீர்த்து வைக்கின்றேன் என்றாள்.

மறுநாள் அரண்மனைக்குச் சென்ற சிறுமி, மன்னர் பிரானே! தங்கள் சந்தேகத்தைத் தீர்க்க வந்தேன். உங்கள் சந்தேகத்தைக் கூறுங்கள் என்றாள்.

கடவுள் எங்கே இருக்கிறார்?

சேவகர்களே! ஒரு பாத்திரத்தில் பசும் பால் கொண்டு வாருங்கள் என்றாள் சிறுமி.

*உடனடியாக ஒரு பாத்திரத்தில் பசும் பால் கொண்டுவரப்பட்டது.*

**சிறுமி:-** மன்னர் பிரானே! இந்தப் பாலில் நெய் இருக்கிறதா?

**மன்னன்:-** ஆம்

**சிறுமி:-** அப்படியானால் அந்த நெய் எங்கே இருக்கிறது என்று காட்டுங்கள் பார்க்கலாம் என்றாள்.

*மன்னன் எதுவும் செய்ய முடியாமல் திகைப்புற்றான்.*

மன்னர் பிரானே! கடவுளும் பாலில் நெய் போல் இருக்கின்றான் என்றாள் சிறுமி.

**சிறுமி:-** சரி உங்கள் அடுத்த சந்தேகத்தைக் கூறுங்கள்.

**மன்னன்:-** கடவுள் எத்திசை நோக்கி இருக்கிறார்.

**சிறுமி:-** சேவகர்களே! ஒரு தீபத்தைக் கொண்டு வந்து இந்த அரண்மனையின் மத்தியில் ஏற்றுங்கள். அவ்வாறே தீபம் ஏற்பட்டது

மன்னர் மன்னா! இத்தீபம் எத்திசை நோக்கி எரிகிறது. எத்திசை நோக்கி ஒளிபரப்புகிறது கூறுங்கள் பார்க்கலாம்.

*சிறுமியின் கேள்விக்கு பதில் கூறமுடியாமல் மன்னன் திக்குமுக்காட மன்னா! இப்படித்தான் கடவுள் இருக்கிறார் என்றாள் சிறுமி.*

**சிறுமி:-** இனி அடுத்த சந்கேத்தை முன் வையுங்கள்.

**மன்னன்:-** கடவுள் என்ன செய்கிறார்?

**சிறுமி:-** சேவகர்களே! மன்னனைச் சிறையில் அடையுங்கள் என்று கர்ச்சிக்கின்றாள். மன்னன் அதிர்ந்து போனான். மன்னர் பெருமானே! இதைத்தான் கடவுள் செய்கிறார் என்றாள்.

ஆக கேள்விகளும் சந்தேகங்களும் தெளிவைத் தரவல்லவை. அந்த அடிப்படையில் தமிழ் அரசியல் தரப்புகள் யாராக இருந்தாலும் உங்களிடம் வருகை தரும் போது பின்வரும் கேள்விகளை அவர்களிடம் கேளுங்கள்.

- எங்களுக்கான தீர்வு என்ன?
- அந்தத் தீர்வை அடைவதற்கான வழிவகை யாது?
- அந்தத் தீர்வு எப்போது அடையப்படும்?
- அந்தத் தீர்வை அடைய முடியாது போனால் அது தொடர்பில் தங்களின் எதிர்வினை எவ்வாறாக இருக்கும்?

இதுபோன்ற கேள்விகளைக் கட்டாயம் கேளுங்கள்.

இவற்றுக்குத் தக்க பதில் கிடைக்குமாயின் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள். பதில் மழுப்பலாக இருந்தால் நீங்களே அவர்களுக்கு விளக்கம் கொடுங்கள். உங்கள் விளக்கம் தூய்மையானது. அரசியல் நோக்கமற்றது. தமிழ் இனப்பற்றுடன் கூடியது.

### இன, மத வேறுபாடின்றி

# அனைவருக்கும் சட்டம் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும்

### பரடுவ ஜினரதன தேரர் வலியுறுத்து

(மாத்தறை)

இனம், மதம், சாதி அடிப்படையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாக உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிய மாத்தறை மாவட்ட சாசனாரக்ஷக சபையின் பதிவாளர் வண. பரடுவ ஜினரதன தேரர், அவ்வாறில்லாமல் அனைவரையும் சமமாக நடத்தும் சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

"ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணி, தென் மாகாண மக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு, நேற்று முன்தினம் திக்வெல்ல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதோடு, அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பண்டைய காலத்தில் ஒரே சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாடாக இலங்கை இருந்தது. பல்வேறு படையெடுப்புகளால் அது மாறியது. இந்நிலையை மாற்றி, ஒரு நாட்டில் ஒரு சட்டத்தை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளை வண. ஜினரதன தேரர் பாராட்டினார். (ஞா)

## குளிரூட்டி பயன்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அலுவலகங்கள், வீடுகளில் குளிரூட்டி பயன்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்தடையின்றி மின் பாவனையை குறைப்பதற்கான யோசனையை அடுத்த அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குளிரூட்டி பயன்பாட்டை நிறுத்துதல், அலுவலகங்களில் மின் சாதனங்களை அணைத்தல் உள்ளிட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் பிரதான வீதிகளில் விளக்குகளை அணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஞா)

### 14 – 19 வரையான வயதினருக்கு

## கிளிநொச்சியில் இன்று 2ஆம் கட்ட தடுப்பூசி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 14 தொடக்கம் 19 வரையான வயதினருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் இன்றுமுதல் மேற்கொள்ளவிருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கோவிட் -19 பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பூசியேற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் 14 தொடக்கம் 19 வயதுடைய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்கனவே முதற்கட்ட தடுப்புசி பெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்கும் செயற்பாடுகள் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஞா-315)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** பெரிய பொக்கணை, வாதரவத்தை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடு பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், கற்பகபுரம், பம்பைமடு, பெரிய காடு, புதிய கோவில் குளம், சாளம்பை புதிய வீட்டுத்திட்டம், சாளம்பைக்குளம், பல்கலைக் கழக வளாகம், சாம்பல் தோட்டம், வேளாங்குளம், விமானப்படை முகாம், மடுகுளம், பூவரசங்குளம், புலவனூர், பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம்பைக் குளம் வீட்டுத்திட்டம், செங்கற்படை, சின்னத் தம்பனை (மடுகுளம்), சோபாலா புளியங்குளம், தாலிக்குளம், வேளாங் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எந்நேரத்திலும் தியானம் செய்யலாம்



"தீட்டா அலை"யிலும், "அல்பா அலை"யிலும் விழிப்பு நிலையிலேயே இருக்கப் பழகிக் கொண்டோமானால், மற்றவர்களுடைய எண்ண அலைகள் தீமை விளைவிப்பனவாக இருந்தாலும், உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பவையாக இருந்தாலும், அவை நம்மைப் பாதிக்கா. உதாரணமாக நான்கு வானொலி நிலையங்கள் நான்கு விதமான வேறு பட்ட நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் ஒலிபரப்புகின்றன. நம் ரேடியோவை எந்த அலை நீளத்தில் வைக்கிறோமோ அது மாத்திரம் தான் இங்கே கேட்கும். மற்றவை எல்லாம் வந்து மோதும்.ஆனால் கேட்காது. அது பேரலவே, தேவையற்ற அலைக் கழிப்பும் பாதிப்பும் இல்லாமல் விட்டு விலகி எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிலைக்கு ஏற்ப நமக்கு என்ன தேவையோ அது கிடைக்கும். நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நினைப்போம். நாம் என்ன நினைக்கிறோமோ அதைச் செய்ய முடியும் என்ற அளவிலே மனிதத்திறமை வெளிப்படுகிறது. இந்த மனிதத் திறமை அதிகரிக்க அதிகரிக்க என்ன ஆகும்? நாம் எங்கு போனாலும், நமக்காக மற்றவர் தாமாகவே அந்த அலையிலேயே கட்டுப்பட்டு, நம் மதிப்பை உணர்ந்து புரிந்து கொள்ள அவர்களுக்கு எண்ணம் தோன்றும். எங்கே போனாலும் நமக்கு வெற்றியாகவே இருக்கும்.

அப்படி எங்கேயாவது வெற்றி இல்லாமல் தடை ஏற்பட்டாலும், அந்தத் தடையினால் நமக்குக் கெடுதல் இல்லை. "நம்மைத் திருப்பி விடுவதற்காக இந்த அலை நீளத்தில் தேவையில்லாதவற்றைத் தள்ளி விடுகிறது. அதனால் அந்த வேலை நடக்கவில்லை" என்று எண்ணி அமைதி அடைந்தால், எந்தக் காலத்தில் எந்தச் சூழ்நிலையில் அந்த வேலை நடக்க வேண்டுமோ அது தானாகவே நடந்துவிடும்.

"படிக்கும்போது தவம் செய்யலாமா? இரவில் செய்யலாமா?" என்றெல்லாம் கேட்பார்கள். தவத்திற்குக் காலமும் வேண்டியதில்லை. திசையும் வேண்டியதில்லை. அறிவை, விரிவான பிரபஞ்ச இணைப்போடு இணைக்கக்கூடிய ஒரு பயிற்சிதான் தவம். அதற்குக் காலநேரம் பார்க்க வேண்டியதில்லை. எந்தக் காலத்திலேயும் செய்யலாம். இதையெல்லாம் உணர்ந்து, நீங்கள் எவ்வளவு தூரம் ஆழ்ந்து தவம் செய்து வருகிறீர்களோ, அந்தளவுக்கு, விவகாரங்களில் ஏற்படக்கூடிய சிக்கல்களை அறுத்துக் கொள்ளவும், தெளிந்த நிலையிலே அந்தச் சிக்கல்களை தீர்த்துக் கொள்ளவும், சிக்கல் வராமல் காத்துக் கொள்ளவும் வேண்டிய விழிப்பு நிலையை இந்தத் தவம் உங்களுக்குக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

60

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**முடிவற்றதொரு கேள்விக்குரிய இடமாக அமைவது ஒன்பது**

எண்ணுப் பெயரில் முடிவற்றதொரு கேள்விக்குரிய இடமாக அமைவது ஒன்பது எண் பற்றிய வரலாறாகும். தொண்டு என்னும் பெயர் மிகப்பழங்காலத்தில் 9 என்ற எண்ணிற்கு வழங்கப்பட்ட பெயர் ஆகும். அதனை ஒன்பது என்று பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் வழங்கப்பட்ட காலத்திலேயே தொல்காப்பியர் வாழ்ந்திருக்க வேண்டும். இதனாலேயே 9 என்ற எண்ணிற்கு தொண்டு என்ற சொல்லையும் ஒன்பது என்ற சொல்லையும் குறிப்பிட்டுள்ளார் என்று பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. தொண்டு என்னும் பெயரை மக்கள் நாளடைவில் மறந்து அதன் இடத்தில் ஒன்பது என்னும் பெயரை உறுதிப்படுத்தி விட்டனர் என்று கூறப்படுகிறது. இருந்தாலும் இதுபற்றி பலர் பல விளக்கங்களை ஆய்வில் வெளியிட்டு உள்ளனர்.

**எண்ணளவாகு பெயர்**

"அவன் மிகவும் குழப்படிக்காரனாக இருக்கிறான்: இரண்டு போட்டுத்தான் வழிக்குக் கொண்டு வந்தேன்", "தெருச் சண்டியர்களுக்கு பொலிஸார் வந்து நாலு போட்டால் ஊர் அமைதியாக இருக்கும்".

இந்த வசனாங்களில் காணப்படுகிற இரண்டும் நான்கும் எண்களைக் குறிக்காமல் "அடி"யைக் குறிக்கின்றன என்பது வெளிப்படை. இரண்டு, நாலு ஆகிய பதங்கள் தமக்குரிய எண்களைக் குறிப்பிடாது அடியின் எண்ணிக்கைக்கு ஆகி வருவதால் எண்ணளவாகு பெயர் எனப்படுகிறது. "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி." என்ற வரியில் வருகின்ற நாலும் இரண்டும் தம்மைச் சுட்டாது நாலடியார், (நாலடிப் பாடல்) திருக்குறள் (இரண்டுவரி வெண்பா) ஆகிய நூல்களையே சுட்டுவதால் அதாவது அந்த நூல்களின் பாடல்வரி எண்ணிக்கையின் அடிப்படையில் அவை ஆகிவருவதால் எண்ணளவாகு பெயர் எனப்படுகின்றன. தேங்காய் வியாபாரியிடம் ஒருவர் "ஒன்று என்ன விலை?" என்பாராகில் அந்த "ஒன்று" தேங்காய்க்கு ஆகி வருவதால் எண்ணளவாகு பெயராகிறது.

> **தேங்காய் வியாபாரியிடம் ஒருவர் "ஒன்று என்ன விலை?" என்பாராகில் அந்த "ஒன்று" தேங்காய்க்கு ஆகி வருவதால் எண்ணளவாகு பெயராகிறது. இவ்வாறு பல இடங்களில் எண்ணளவாகு பெயர்களைக் காணலாம்.**

அனைத்து அளவைகளிலும் முன்னிற்பது எண்ணல் அளவை. எண்ணல் அளவை பற்றிய வரலாறு. பிற அளவைகளில் இதன் செல்வாக்கு, இதன் தோற்றம் தொல்காப்பியம் கூறும் பல நூற்பாக்களில் இதன் முதன்மை போன்ற பல எண்ண ங்கள் முதல் அளவையாக எண்ணலளவை இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் சான்றுகளாகும். ஆயினும் அளவை என்ற பெயர் முதன் முதலில் முகத்தல் அளவையையே குறிப்பிடப் பயன்பட்டிருக்கிறது. பண்டைய பல நூல்களில் பிற அளவுப் பெயர்களை விட முகத்தல் அளவைப் பெயர்களையே அதிமாகக் குறிப்பிடுகின்றன.

எனவே எண்ணல் அளவை பிற அறவைகளுக்கு காரணமாகி முதலில் தோற்றம் பெற்றிருப்பினும் உணவுப் பொருட்கள் மிகுதியாக அளக்கப்பயன்பட்ட நிலை காரணமாக முகத்தல் அளவையே முன்னிலை பெற்ற அளவு என்று சுட்டிக்காட்டினர் எனக் கருதலாம்.

**நிறுத்தலளவை**
**(எடுத்தல் அளவை)**

குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாமெனப் படிக்கல் கொண்டு தராசிலிட்டு நிறுப்பது நிறுத்தல் அளவை ஆகும். பொருட்களை எடுத்து, கனம் பார்த்து, தூக்கி அளக்கும் காரணங்களால் எடுத்தல், கனம் பார்த்தல், தூக்குதல் போன்ற பிற பெயர்களும் வழங்கப்படுகின்றன.

திண்மம், திரவம் மற்றும் வாயுப் பொருட்களை அளக்கப் பயன்படுகிறது. பொருட்களின் நிறைகள் மற்றொரு நிறையுடன் ஒப்பிட்டே அளவிடப்பட்டது. ஒப்பீட்டு நிறையாக தாவர விதைகள் பயன்படுத்தப்பட்டதாக அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக தாவர விதை களான குன்றிமணி, எள்ளு, நெல், கழுஞ்சிகாய், சீரகம், மஞ்சாடி போன்றவற்றைக் குறிப்பிடலாம். நுண்ணிய அளவுகளைக் காட்டும் எடைகளாக இவை பயன்பட்டு இருத்தல் வேண்டும்.

பின்னைய காலத்தில் வந்த உலோக அளவுகள் இவற்றை மறைத்துவிட்டன. அளவிடுவதற்கு தமிழர் தராசுக் கோலைப் பயன்படுத்தினர். சமன்கோல், தராசு, துலா, துலாம், துலாக்கோல், நிறுப்பான் என இலக்கியங்களில் சுட்டப்படுவன இவை. சமன் செய்து சீர்தூக்கும் கோலாக வள்ளுவரால் சுட்டப்படும் இத்தராசுக் கோலின் பல வடிவங்களை தற்காலத்தில் நாங்கள் காணலாம்.

> **குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாமெனப் படிக்கல் கொண்டு தராசிலிட்டு நிறுப்பது நிறுத்தல் அளவை ஆகும். பொருட்களை எடுத்து, கனம் பார்த்து, தூக்கி அளக்கும் காரணங்களால் எடுத்தல், கனம் பார்த்தல், தூக்குதல் போன்ற பிற பெயர்களும் வழங்கப்படுகின்றன.**

**நிறுத்தல் அளவுக்கான தராசு ஆறு வகைப்படும்.**

1. மணித்தராசு - இது இரத்தினம் முதலியவற்றை நிறுக்கும் மிகச் சிறிய தராசு.
2. பொன் தராசு - தங்கம் போன்றவைகளை நிறுக்கும் சிறு தராசு.
3. உலோகத் தராசு - செம்பு, பித்தளை முதலியவற்றை நிறுக்கும் பெருந் தராசு.
4. பண்டத் தராசு - பலசரக்குகளை நிறுக்கும் தராசு.
5. கட்டைத் தராசு - விறகு அல்லது மூட்டைகளை நிறுக்கும் தராசு. இது இரு புறமும் சதுர மரப்பலகைகளைத் தட்டுக்களாகக் கொண்டிருக்கும்.
6. தூக்கு - காய்கறிகளை நிறுக்கும் தராசு. இது மரக்கம்பாலான துலாக் கோலின் ஒரு பக்கத்தில் மட்டும் தொங்கும் கூடைத் தட்டால் ஆனது.

இந்த நிறுத்தல் அளவை பொன்னளவை, பிற பொருளளவையென இருவகைப்படுகிறது. பொன் நிறுத்தல் வாய்ப்பாடு அட்டவணை-6 இலும், பிற பொருளளவை வாய்ப்பாடு அட்டவணை-7 இலும் தரப்பட்டுள்ளன. இப்பெறுமானங்கள் சில இடங்களில் வேறுபட்டு இருந்ததையும் அவதானிக்க முடிகிறது. கிராமில் அவற்றின் பெறுமதி அட்டவணை -8 இல் தரப்பட்டுள்ளன. இவ் அட்டவணைகளில் உள்ள தகவல்கள் அலகுகள் பற்றி டாக்டர் கே.பகவதியால் எழுதப் பட்டு 1983 இல் வெளிவந்த "தமிழர் அளவைகள்" என்னும் நூலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

**அட்டவணை -6 பொன்நிறுத்தல்வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| 1 நெல்(நெல்லெடை) | = | |
| 4 நெல் | = | 1 குன்றிமணி |
| 2 குன்றிமணி | = | 1 மஞ்சாடி |
| 2 மஞ்சாடி | = | 1 பணம் (பணவெடை) |
| 5 பணவெடை | = | 1 கழஞ்சு |
| 10 வல்லம் | = | 1 கழஞ்சு |
| 8 பணவெடை | = | 1 வராகன் (வராகனெடை) |
| 4 கழஞ்சு | = | 1 கஃசு |
| 4 கஃசு | = | 1 பலம் |
| 20 மணங்கு | = | 1 கண்டி (பாரம்) |

**அட்டவணை – 7 பண்டங்கள்நிறுத்தல்வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| 32 குன்றிமணி | = | 1 வராகன் (வராகனெடை) |
| 10 வராகனெடை | = | 1 பலம் |
| 100 பலம் | = | 1 கா |
| 8 பலம் | = | 1 சேர் |
| 5 சேர் | = | 1 வீசை |
| 6 வீசை | = | 1 துலாம் |
| 8 வீசை | = | 1 மணங்கு |

**அட்டவணை – 8 நிறுத்தல் அளவை**

| | | |
|---|---|---|
| உளுந்து (grain) | = | 65 மி. கி. |
| குன்றிமணி | = | 2 உளுந்து (130 மி. கி.) |
| மஞ்சாடி | = | 2 குன்றிமணி (260 மி.கி.) |
| மாசம் | = | 3 மஞ்சாடி (780 மி.கி.) |
| பணம் (எடை) | = | 488 மி.கி (3.75 குன்றிமணி) |
| வராகன் (எடை) | = | 32 குன்றிமணி (4.2 கி.) |
| கழஞ்சு | = | 40 குன்றிமணி (5.1 கி.) |
| பலம் | = | 10 வராகன் (எடை) (41 கி.) |
| கஃசு அல்லது கைசா | = | 10.2 கி. (1/4 பலம்) |
| தோலா | = | 1 ரூபா எடை (12 கி.) |
| அவுன்ஸ் | = | 2 ½ ரூபா எடை (·30 கி.) |
| சேர் | = | 280 கி. |
| வீசை | = | 1.4 கி.கி. |
| தூக்கு | = | 1.7 கி.கி. |
| துலாம் | = | 3.5 கி.கி. |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

வடைந்துள்ளதால் இன்று இரவு முதல் மின்வெட்டு நடைமுறைப்படுத் தப்படும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

நீர் மின் உற்பத்தி நேற்று முன்தினம் மொத்த மின் தேவையில் 25 சதவீதமாக குறைந்துள்ளது. அதே நேரத்தில் நிலக் கரி, டீசல் மற்றும் உலை எண்ணெய் மூலம் மின் உற்பத்தி 72 சதவீதமாக அதிகரித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 15 பேர்...

படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 15,299 ஆக அதி கரித்துள்ளது. (ஞா)

## யாழை மீண்டும்...

நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட சுகாதார மேம்பாட்டு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற தொற்றுநோய் பர வலை தடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 19,062 பேர் கொரோனாத் தொற்றாளர்களாகவும் 502 இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ள ளது. தற்போது 35 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளன.

பூஸ்டர் தடுப்பூசியை 88,800 பேர் பெற்றுள்ளனர். முதலாம், இரண்டாம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

30 வீதமானவர்களே பூஸ்டர் தடுப் பூசியை இதுவரை பெற்றுள்ளனர். ஒமிக் ரோன் திரிபு தற்போது பரவிவரும் நிலை யில் யாழ்.மாவட்டத்திலும் அது பரவுவதற் கான நிலைமைகள் காணப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் பூஸ்டர் தடுப் பூசியை பெற்றுக் கொள்வது அவசியம். இதற்கமைய, எதிர்வரும் 31ஆம் திகதி முதல், பூஸ்டர் தடுப்பூசி வாரம் பிரகடனப் படுத்தவுள்ளோம் என்றார். (ஞா-33)



















## ரூ.5 ஆயிரம்...

குவதற்கான சுற்றுநிருபம் திறைசேரி செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ள இந்த 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை அரசாங்கத்தின் வசமுள்ள நிறுவனங் களின் ஊழியர்களுக்கும் வழங்குவது தொடர்பான தீர்மானத்தை அதன் பணிப் பாளர் சபை மேற்கொள்ளும் என்றும் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடை முறைகள், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவினால் குறித்த நிறு வனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## கோவிட்டால்...

னகே கொரோனாத் தொற்றால் உயிரிழந் துள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது வைத்திய சாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு காலமானார்.(ஞா)

## வவுனியாவில்...

இலுப்பையடிப் பகுதியில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கூடாரம் அமைக்கப் பட்டு பிள்ளையார் சிலை வைத்து நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்தது.

வவுனியா நகரின் இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள், அப்பகுதியால் பயணத் தில் ஈடுபடும் மக்கள் என பலராலும் வழி படப்பட்டு வந்த பிள்ளையார் சிலையே மாயமாகியுள்ளது. (ஞா-250)

## தமிழர் தரப்பின்...

இலங்கையின் அரசியல் முரண்பாடு கள் குறித்து கருத்து வெளியிட்ட அவர், இனியும் தவறான கொள்கையில் அரசாங் கம் பயணித்தால் ஒட்டுமொத்த நாடும் அதளபாதாளத்தில் விழும் எனக் கூறி யுள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், "13 ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழர் தரப்பு வலி யுறுத்தியுள்ளமை, வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனைச் சாதாரணமாக கருத முடியாது.

பூகோள அரசியல் போட்டியில் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது. இதில் தமிழர் தரப்பின் நகர்வுகள் அவதானிக் கப்பட வேண்டிய ஒன்றாகும். வெவ்வேறு நாடுகளுடன் நாம் பகுதிபகுதியாக இணைய நினைப்பது ஆரோக்கியமான விடயமாக இருக்காது. நாடாக ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட் டுள்ளது என்றார். (ஞா)

# நாட்டின் தலைவராக ரணில்

## அதிகார சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றம்

(கொழும்பு)

நாட்டின் தலைவராக ரணில் விக்கிரம சிங்கவை தெரிவு செய்ய வேண்டும் என்ற யோசனை கரந்தெனிய ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார சபைக் கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் இந்த அதிகார சபைக் கூட்டம் நேற்று நடை பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கரந்தெனிய அதிகார சபையின் தலைவர் நுவன் சோமரத்ன இந்த யோசனையை கொண்டு வந்ததுடன் அதிகார சபையின் குழுச் செய லாளர் மங்கள குமார அதனை ஆமோ தித்தார். (ஞா)

## விடுதலைப் புலி...

அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம் பகே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக உள்நாட்டில் தோற்கடிக்கப்பட்டுள்ள போதி லும் அவர்கள் வெளிநாடுகளில் செயற்படு கின்றனர்.

அவர்களின் கொள்கை மாற வில்லை. தமிழீழம் என்ற தனி நாடு. குறிப்பிடத் தக்க அளவு புலம் பெயர் தமிழர்கள் விடுதலைப் புலி களின் கொள்கை களை முன்னெடுப் பதால் - வாக்கு களை பெறுவதற் காக அவர்களுக்கு ஆதரவளிக்கும் - தீர்மானங்களை எடுக்கும் நிலை யில் உள்ளவர் களின் ஆதரவை அவர்களால் பெற முடிகின்றது என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ஞா)

## பேரு...

பேருந்து ஊழி யர்கள் பொறுப் புடன் செயற்படா விட்டால் எதிர் காலத்தில் இந்த கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நிலை மையை கருத்திற் கொண்டு. பேரு ந்து ஊழியர்கள் தொடர் பில் சிந் தித்து கட்டண அதி கரிப்பை வழங்கி னோம்.


அவ்வாறாயின் அவர்கள் எமது நிபந் தனைக ளுக்கு இணங்க வேண்டும். இல் லையாயின் பழைய கட்டணத்தை அமு லாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம் என்றார். (ஞா)

## காலாவதியான...

அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பல பொது வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளன. பொருளாதார பிரச்சினையால் நாடு பாரியளவில் பின் தங்கியுள்ளது.

எனவே இந்த ஆபத்திலிருந்து இலங் கையை முன்கொண்டு செல்வதற்கு காலா வதியான தீர்வுகளினால் முடியாது என் றார். (ஞா)




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**



**அருள்**

இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- **076 443 1576** (C-3611)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9778)

**076 825 7716** (ஆகாஸ்)

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (9808)

**077 814 7389, 077 614 7333**

---

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கு கணினி, ஆங்கில கற்கைநெறிகள்

புதிய பிரிவு ஆரம்பம்
26/1/2022 Wed 3:30 pm
29/1/2022 Sat 9 am/3pm

**DMI** COMPUTER EDUCATION
0777 173517



**Junior Diploma in Computer Science**
Windows, MS Office, IT
Micro:bit , Robotics,
Coding for kids
Mathematical Games (C-3613)

## Spoken English For KIDS

Grammar, Reading, Writing, Listening, Speaking
School + Cambridge Curriculum

பதிவுகளுக்கு உங்கள் பெயரை 0777 173517 என்ற இலக்கத்துக்கு SMS or viber or whatsApp செய்யுங்கள்

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.103, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

---

# தேவை

கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் கடைக்கு அனுபவமுள்ள கணக்காளர் தேவை. (9768)

**070 640 6905**
**077 541 3064**

---

# பணிப்பெண் தேவை

தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
இடம்: கிளிநொச்சி மற்றும் கொழும்பு (9783)

**077 711 1130**

---

# தாரா

**விற்பனைக்குண்டு.**

தொடர்புகளிற்கு (9795)
**077 711 1130**

---

# உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-3578)



**சம்பளம் - 30'000/-**

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

---

# விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

## UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3577)

**0768226240** DHL

---

# குருக்கள் தேவை

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

- மேற்படி ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகளை ஆற்றுவதற்குப் பிராமண குலத்தைச் சேர்ந்த குருக்கள் தேவை.
- தங்குவதற்கு வீடு வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி 30.01.2022

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : தலைவர்/ செயலாளர்
பரிபாலன சபை,
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நந்தாவில், கொக்குவில். (9805)


---

# 1ஆம் ஆண்டு நினைவுதினம்

தாய் மடியில்
23 • 06 • 1942



சிவன் அடியில்
03 • 02 • 2021

## அமரர் திருமதி ஆறுமுகம் செல்லம்மா

**(பலகாடு, காரைநகர்)**

அம்மாவின் முகம் காணாது ஓராண்டு சென்றுவிட்டது. அம்மாவிடம் இருந்து கிடைத்த அளவுகடந்த பாசத்தை எம்மால் மறக்கமுடியவில்லை. எம் உயிர் இருக்கும்வரை அம்மாவின் நினைவு இருக்கும். அம்மாவின் ஆத்மா சாந்தியடைய அவரின் குலதெய்வமான காரைநகர் கருங்காலி போசுட்டி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (24.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அவரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு இடம்பெறும்.

அம்மாவின் உறவுகள், அன்பு உள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (9789)

அரியாலை கிழக்கு,
அரியாலை.
076 020 5469

**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

---


## Oblate Institute for Higher Education
# De Mazenod Campus (DMC)

Approved by: TVEC (Tertiary and Vocational Education Commission)
Registered No:-P25/0105



அமல மரித்தியாகிகளின் (OMI Fathers)
உயர்கல்வி நிலையம் நடாத்தும்

## Writing & Spoken English Course

(ஆங்கில மொழிக் கற்கையின் எழுத்து மற்றும் பேச்சுப் பயிற்சிக் கற்கைநெறி)
ஆங்கில மொழி தெரிந்தும் பேச, வாசிக்க மற்றும் எழுத கடினம் என நினைத்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

சாதாரணதர, உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள், இல்லத்தரசிகள் என அனைவரும் இணைந்து கொள்ள முடியும்.

இப்பாடநெறியானது 100 மணித்தியாலங்களைக் கொண்டமைந்ததுடன் வார நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) பிற்பகல் 5.00 - 6.00 வரை வகுப்புக்கள் நடைபெறும்.

பயிற்சிப் பாடநெறியின் நிறைவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

## கற்கைநெறியின் பெறுபேறுகள்...

- ஏனையோருடன் ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையோடு சரளமாகப் பேச முடியும்.
- விளக்கக் காட்சிகள் (Presentation), அறிக்கைகள் (Minutes), பயிற்சிப் பட்டறைகள் (Workshops) என்பவற்றை திறன்பட செய்ய முடியும்.
- கடிதம் எழுதுதல் (Letter writing), சுருக்கம் எழுதுதல் (Summary writing), கட்டுரை வரைதல் (Essay writing) போன்ற எழுத்தாற்றல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- சரியான ஆங்கில உச்சரிப்பை கற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் இப்போதே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.**

தொடர்புகளுக்கு:- T.P:- **076 2626 234, 077 6767 662**
**653/A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்திலும் தொடர்பக நூலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். (9754)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org